

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.9.2025) சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கான ஆதி கலைக்கோல் பயிற்சி பட்டறை நிகழ்ச்சியையொட்டி அமைக்கப்பட்டிருந்த பாரம்பரிய இசைக்கருவிகள் கண்காட்சியை பார்வையிட்டார். இதில் அமைச்சர்கள் தா.மோ. அன்பரசன், மருத்துவர் மா.மதிவேந்தன் உள்பட அரசு அலுவலர்கள், மாணவர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.9.2025) சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கான ஆதி கலைக்கோல் பயிற்சி பட்டறை நிகழ்ச்சியையொட்டி அமைக்கப்பட்டிருந்த அரசு சமூக நீதி கல்லூரி விடுதி மாணவர்களின் ஓலியம் மற்றும் சிற்ப கலை படைப்புகளை பார்வையிட்டார். இதில் அமைச்சர்கள் தா.மோ. அன்பரசன், மருத்துவர் மா.மதிவேந்தன் உள்பட அரசு அலுவலர்கள், மாணவர்கள் உடனிருந்தனர்.

## சென்னையில் ‘ஆதி கலைக்கோல்’ பயிற்சிப் பட்டறை 3 நாட்கள் நடக்கிறது:

# எளிய மக்களின் கலை - இலக்கியம் - பண்பாட்டை உலகம் எங்கும் எடுத்துச் செல்வோம்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்து வாழ்த்துரை வழங்கினார்!



சென்னை,செப்.24-

**சென்னை வர்த்தக மையத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் கலை - இசை - பண்பாடு - இலக்கியம் - ஓவியம் போன்றவற்றை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்க்கும் வகையிலான, ‘ஆதி கலைக்கோல்’ பயிற்சிப் பட்டறையை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்து வாழ்த்துரை வழங்கினார்.**

**அப்போது அவர், ``தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதிக் கழகம் சார்பில், நடத்தப்படுகிற இந்தப் பயிற்சிப் பாசறை வெல்லட்டும்! எளிய மக்களின் கலை - இலக்கியம் - பண்பாட்டைப் போற்றுவோம். அவற்றை உலகெங்கும் எடுத்துச் செல்வோம்!” என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:**

இந்தத் துறையின் சார்பாக சிறப்புக்குரிய ஆதி கலைக்கோல் விழாவை, உங்கள் முன்னிலையில் தொடங்கி வைப்பதில் மிகுந்த பெருமையும், மகிழ்ச்சியும் அடைகிறேன். 11 மணிக்கு முதலமைச்சர் தலைமையில் ஒரு ஆய்வுக் கூட்டம் இருக்கிறது. இங்கே வந்து இந்த இசைக்கலைஞர்களையும், இசைக்கருவிகளையும், நாடகக் கலைஞர்களையும் பார்க்கும்போது, அவர்களுடன் இன்னும் கொஞ்சம் நேரம் செலவிட வேண்டும் என்ற ஈடுபாட்டினால், மேடைக்கு வருவதற்கு கொஞ்சம் தாமதமாகிவிட்டது.

### கவிஞர்கள், ஓவியர்கள்

கலைஞர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஓவியர்கள், சமூக விடுதி மாணவர்கள், உங்கள் எல்லோரையும் இந்த விழாவில், ஒரே இடத்தில் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். அதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த இந்தத் துறைக்கும், ஏற்பாட்டாளர்களுக்கும், முக்கியமாக உங்களின் அமைச்சர் மதிவேந்தன் அவர்களுக்கும், சகோதரர் இளையராஜா அவர்களுக்கும் என் வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் கலைவடிவங்களை, இன்றைக்கு இருக்கக்கூடிய நம் இளம் தலைமுறையினர் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் இந்த மூன்று நாள் பயிற்சிப் பட்டறை இங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. போக் ஆர்ட், தியேட்டர் ஆர்ட், லிட்ரேச்சர் மற்றும் விஷுவல் ஆர்ட் என்று பல துறைகளின் வல்லுநர்கள், சாதித்தவர்கள் மூலம் இங்கே மூன்று நாட்கள் பயிற்சி கொடுப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது.

### தமிழிசை இயக்கம்

பல ஆயிரம் வருடங்களாக கலை என்பது மக்களின் வாழ்க்கையில், ஒரு முக்கியமான அங்கமாக இருந்து வருகிறது. கலைக்கும், கலைஞர்களுக்கும் மதிப்பும் மரியாதையும் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் அதிகமாக கிடைக்கும். அதிலும் குறிப்பாக, நம் தமிழ்நாட்டில் அதற்கான முக்கியத்துவமே மிக மிக அதிகம். ஆனால், என்ன விஷயம் என்றால், எல்லா கலைகளுக்கும் சமமான இடம் கிடைக்கிறதா, சமமான முக்கியத்துவம் கிடைக்கிறதா என்று, நாம் யோசித்துப் பார்த்தோமென்றால், அது இல்லை என்பது ஒரு கசப்பான உண்மை. உயர்தட்டு மக்களின் கலைகளுக்கு ஒரு தனி மதிப்பும், உழைக்கின்ற, ஒடுக்கப்பட்ட, ஏழை, எளிய மக்களின் கலைகளுக்கு வேறு மாதிரியான ஒரு மதிப்பும்தான் நம் சமுதாயத்தில் கிடைத்துக் கொண்டிருந்தது. இந்த ஏற்றத்தாழ்வை உடைப்பதற்கான முயற்சிகளைத் தொடர்ந்து, நம் அரசு எடுத்துக் கொண்டு வருகிறது. குறிப்பாக, இசையில் ஏற்றத்தாழ்வு இருக்கக்கூடாது என்றுதான், நம் தமிழ்நாட்டில் தமிழிசை இயக்கம் வந்தது.

இந்த நேரத்தில் ஒரு சம்பவத்தை உதாரணமாக இங்கே உங்களுக்கு நினைவுப்படுத்த விரும்புகிறேன். 1946-ஆம் ஆண்டு, தஞ்சை மாவட்டம், திருவையாறு தியாகராஜர் உற்சவம் நடந்தது. அந்தக் காலகட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தந்தை பெரியார் அவர்கள் நடத்தி வந்த குடியரசு பத்திரிக்கையில் பணியாற்றிக் கொண்டிருந்தார். அப்போது தண்டபாணி தேசிகர் என்பவர் தியாகராஜர் உற்சவ மேடையில், ஒரு தமிழ்ப் பாட்டு பாடினார். அவருக்கு அடுத்து பாட வந்த பாடகர் ஒருவர், தண்டபாணி தேசிகர் தமிழ்ப் பாட்டு பாடியதால், இன்றைக்கு இந்த மேடையே தீட்டாகிவிட்டது. அதனால், இனிமேல் நான் இந்த மேடையில் பாடமாட்டேன் என்று சொன்னார்.

இதை கேள்விப்பட்ட டாக்டர் கலைஞர் அவர்கள். அப்போது அவர் வேலை பார்த்துக் கொண்டிருந்து ‘குடியரசு’ பத்திரிகையில், ‘தீட்டாயிடுத்து’ என்ற தலைப்பில், ஒரு பெரிய தலையங்கத்தை எழுதி, தன் எதிர்ப்பை அந்த வயதிலேயே அவர் தெரிவித்தார். அந்த காலத்தில் இசையில் எந்த அளவுக்குப் பாகுபாடு இருந்தது என்பதற்கு இது ஒரு சிறிய எடுத்துக்காட்டு.

தந்தை பெரியார் அவர்கள் கலையை பற்றிச் சொல்லும்பொழுது, அது வெறும் பொழுதுபோக்கு அம்சமாக கலை இருந்திடக்கூடாது. அது மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்க வேண்டும் என்று பெரியார் விரும்பினார். குறிப்பாக, மூட நம்பிக்கைகளைப் பரப்ப, கலையைப் பயன்படுத்தக் கூடாது என்பதில் பெரியார் மிகத் தெளிவாக இருந்தார்.

### நாடகங்கள், திரைப்படங்கள்

பெரியார் சொன்னதைத்தான் நம் திராவிட இயக்கப் படைப்பாளர்கள் இன்றைக்குத் தொடர்ந்து வருகிறார்கள். குறிப்பாக பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகிய நம் தலைவர்கள் தங்களின் நாடகங்கள், திரைப்படங்கள் மூலமாக சமூக முன்னேற்றத்துக்கான கருத்துகளை, சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் தொடர்ந்து மக்களுக்கு எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

ஆதிதிராவிடர் மக்களின் நாட்டுப்புறப் பாடல்கள் எல்லாம், ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கான குரல்களாக இருந்திருக்கின்றன. நாட்டுப்புறப் பாடல்களைக் கேட்டோம் என்றால், சமூக கொடுமைகள், இயற்கைச் சீற்றங்களில் இருந்து மக்களைக் காப்பாற்றியவர்களை, அடித்தட்டு மக்கள், இன்னும் தங்களின் ஹீரோவாகக் கொண்டாடிக்கொண்டு இருக்கிறார்கள். அந்த ஹீரோக்கள் எல்லாம், பெரும்பாலும் ஒடுக்கப்பட்ட சமூகத்தில் இருந்து வந்தவர்களாகத்தான் இருப்பார்கள். ஒடுக்கப்பட்ட மக்களுக்காக களத்தில் நின்ற ஹீரோக்களை நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக நாட்டுப்புறக் கலைகள் மூலமாக இன்றைக்கு நம் தமிழ் மக்கள் கொண்டாடிக்கொண்டு இருக்கிறார்கள்.

அடித்தட்டு மக்களின் கலைகள், அவை பாடலாக இருக்கட்டும், நடனமாக இருக்கட்டும், இலக்கியமாக இருக்கட்டும், ஓவியமாக இருக்கட்டும், அவற்றில் ஒருவிதமான ஏக்கம், கோபம், எதிர்பார்ப்பு எல்லாமே இருக்கும். அடித்தட்டு மக்களின் கலைகளில் இருப்பதுதான் மக்களின், தமிழ் நாட்டின் உண்மையான வரலாறு. இன்றைக்கு ஒடுக்கப்பட்ட மக்களின் பார்வையிலிருந்து சமுதாயத்தைப் பார்க்கும் படைப்புகள் பல வடிவங்களில் வந்து கொண்டிருக்கின்றன.

### கலைக்கு உரிய அங்கீகாரம்

இப்படிப்பட்ட கலைவடிவங்களை, இன்னும் ஒரு பரந்த தளத்தில் கொண்டு சேர்க்க வேண்டும். எளிய மக்களின் கலைக்கு உரிய அங்கீகாரம் கிடைக்க வேண்டும். அந்த நோக்கத்துடன்தான், நம் அரசு இந்த விழாவை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கிறது. இந்த மூன்று நாள் பயிற்சிப் பட்டறை இன்றைய இளைஞர்களுக்கு நிச்சயம் மிகப்பெரிய ஒரு வாய்ப்பாக இருக்கும். இன்றைக்கு ஆதிதிராவிடர், பழங்குடியினரின் கலை, இலக்கியம், பண்பாட்டை வளர்த்தெடுக்க, ஏராளமான முன்னெடுப்புகளை நம் அரசு தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறது.

‘களமாடு’ என்ற முன்னெடுப்பு மூலமாக ஆதிதிராவிடர், பழங்குடியின மாணவர்களுக்கு கலைத்திறன் முகாம்கள் தொடர்ந்து நடத்தப்பட்டிருக்கின்றன. தமிழ்நாடு ஆதிதிராவிடர் கலை இலக்கியக் கழகத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்ற சிறந்த எழுத்தாளர்களுக்கான பரிசுத்தொகை 50 ரூபாயிலிருந்து, இன்றைக்கு நம் முதலமைச்சர் அவர்கள் ஒரு லட்சம் ரூபாயாக உயர்த்தி கொடுத்திருக்கிறார். ஆதிதிராவிடர் மக்களின் கலை, இலக்கியம், வாழ்வியல், பண்பாடு, கலாசாரத்தை பிரதிபலிக்கின்ற இலக்கிய படைப்புகள் ஆங்கிலத்திலும், மொழிப்பெயர்ப்பு செய்யப்பட்டு வந்து கொண்டிருக்கிறது.

### மூன்று கோடி ரூபாய்

தொல்குடியினர் தினவிழா, ஒவ்வொரு வருடமும் பழங்குடியினர் உண்டு உறைவிட பள்ளியில் தொடர்ந்து நடத்திக் கொண்டு வருகிறோம். இதில் மாணவர்களுக்குப் பல வகையான போட்டிகளும் நடத்தப்படுகிறது. பழங்குடியின மக்களின் மொழிகளைப் பாதுகாக்க, மூன்று கோடி ரூபாய் வரை செலவிடப்பட்டு, ஒலி, ஒளி ஆவணங்களாகப் பதிவு செய்யப்பட்டு, தொடர்ந்து அந்த சேவைகளையும் நம் அரசு செய்து கொண்டிருக்கிறது.

ஆதி திராவிட மக்களின் கலைகளை, அனைத்து மக்களுக்குமான கலைகளாக ஆக்குவதற்கு இதுபோன்ற பயிற்சிப் பட்டறைகள் தொடர்ந்து நடைபெற வேண்டும். இந்தத் துறை அதைத் தொடர்ந்து நடத்தும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதற்கு அனைத்து வகையிலும் திராவிட மாடல் அரசும், நம் முதலமைச்சர் அவர்களும் உங்களுக்கு துணை நிற்பார்கள்.

இந்த மூன்று நாள் பயிற்சிப் பட்டறை சிறப்பாக அமையட்டும். இதில் பங்கேற்கக் கூடிய இளைஞர்கள், மாணவர்கள் உங்களின் திறனை வளர்த்துக் கொள்ள என் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விழாவை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள உங்கள் துறையின் அமைச்சர் சகோதரர் மதிவேந்தன் அவர்களுக்கும், தாட்கோவின் தலைவர் என் அருமை சகோதரர் இளையராஜாவுக்கும், அரசு அதிகாரிகள், விழா ஏற்பாட்டு குழுவினர் அத்தனை பேருக்கும் மீண்டும் என் வாழ்த்துகளைத் தெரிவித்து, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், மருத்துவர் மதிவேந்தன், தாட்கோவின் தலைவர் இளையராஜா, அரசு செயலாளர் லட்சுமி பிரியா ஐ.ஏ.எஸ்., தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் கந்தசாமி ஐ.ஏ.எஸ்., மூத்த பறை இசைக்கலைஞர் பத்மஸ்ரீ வேலு ஆசான், தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்பட மற்றும் தொலைக்காட்சி நிறுவனத்துறை தலைவர் டிராட்ஸ்கி மருது, ஆதிதிராவிடர், பழங்குடியினர் நல ஆணையத் துணைத் தலைவர் எழுத்தாளர் இமயம், மூத்த நாடக கலைஞர் மு.ராமசாமி, ஓவியர் சந்திரசேகரன் குருசாமி, எழுத்தாளர் சுகிர்தராணி, ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர் ஆனந்த் ஐ.ஏ.எஸ்., தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு கழகத்தின் பணியாளர்கள், கிள்ளை ரவீந்திரன் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.